/மின்னஞ்சலில்/

அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.05418/ஆ3/2022, நாள். 24.06.2022

பொருள்– தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – அரியலூர் வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 2022–23 ஆம் கல்வி ஆண்டில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பள்ளிக் கல்வி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிகமாக நிரப்பிக் கொள்ளும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல் – சார்பு.

பார்வை – சென்னை6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.34087/சி2/இ2/2022, நாள்.23.06.2022

----

பார்வையிற் கண்டுள்ள பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி, அரியலூர் வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களில் பள்ளிக் கல்வி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிக அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்துக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் கீழ்க்கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி தகுதி வாய்ந்த ஆசிரியர்களை தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

1. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் காலிப் பணியிடங்களில் <u>(இணைப்பில் உள்ள பணியிடங்கள் மட்டும்)</u> ஜுலை 2022 முதல் ஏப்ரல் 2023 முடிய (10 மாதங்களுக்கு மட்டும்) தற்காலிகமாக அந்தந்த ஊர்களில் அமைந்துள்ள பள்ளி பகுதி மற்றும் அருகாமையில் உள்ள பகுதியில் உள்ள தகுதியுள்ள நபர்களை சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் / உயர்/மேல்நிலைப் பள்ளிப் பிரிவிற்கான உதவி தலைமையாசிரியர் மற்றும் மூத்த பட்டதாரி ஆசிரியர் ஆகியோர்களை கொண்ட குழு மூலமாக தற்காலிகமாக நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் <u>அவ்வாறு ஆசிரியர்களை தேர்வு செய்யும் பொழுது இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்பதை நியமனம் செய்யப்படும் நபர்களுக்கு கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டும்.</u>

2. இவ்வாறு தற்காலிகமாக பள்ளி மேலாண்மை குழுவின் வாயிலாக நியமனம் செய்யப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பூதியம் வழங்கப்படும்.

(த.பி.பா)

3. இணைப்பில் உள்ள காலிப் பணியிடங்களில் (37 பணியிடங்கள்), அந்தந்த பாடத்திற்கு, பட்டதாரி ஆசிரியருக்கான முழுத் தகுதி பெற்ற நபர்களை மட்டுமே பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிகமாக நியமனம் செய்து நிரப்ப வேண்டும்.

4. மேற்காண் காலிப் பணியிடங்களில், சம்மந்தப்பட்ட பாடத்திற்கு முற்றிலும் முழுமையாக தகுதி வாய்ந்த ஆசிரியர்களை மட்டுமே, மேற்குறிப்பிட்டுள்ள குழு உறுப்பினர்களை கொண்டு, பள்ளி மேலாண்மைக்குழு மூலம் எவ்வித புகார்களுக்கும் இடமின்றி தற்காலிகமாக நியமனம் செய்துக் கொள்ள வேண்டும்.

5. மேலும், இக்காலிப் பணியிடங்களில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பணி நாடுநர்களை தேர்வு செய்து நிரப்பப்படும் வரை / பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும் வரை, தற்காலிக அடிப்படையில், ஆசிரியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், அக்காலக் கட்டத்திற்குள், தொடர்புடைய பாடப்பகுதிகள் (Subject Portions) அனைத்தும் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களால் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதோடு, இதனை சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் இதனை கண்காணித்து வருதல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

6. மேலும், இக்காலிப் பணியிடங்களில், தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கான ஒப்புகைச்சீட்டு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரால் பராமரிக்கப்பட வேண்டும். இது தணிக்கைக்கு உட்பட்டது. ஆகையால் ஒப்புகை சீட்டு பள்ளித் தலைமையாசிரியரின் முழுக்கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

7. இவ்வாறு, பள்ளிக் கல்வி மேலாண்மைக்குழு மூலம் நிரப்பப்படும் ஆசிரியர்கள் பணிபுரியும் பணியிடத்திற்கு மேற்கண்ட காலத்திற்குள் (10 மாதத்திற்குள்) பதவி உயர்வு மூலமாகவோ அல்லது நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது மாறுதல் மூலமாகவோ நிரப்பப்படின் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் நிரப்பப்படும் ஆசிரியர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்யப்பட வேண்டும்.

8. பள்ளி மேலாண்மைக்குழு மூலம் நிரப்பப்படும் பணியிடங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த (பட்டதாரி ஆசிரியர்கள்) பணிநாடுநர்கள் இருப்பின், அதில் (TET) ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சி பெற்றவர்களுக்கும், அவ்வாறு இல்லையெனில் இல்லம் தேடிக் கல்வித்

(த.பி.பா)

திட்டத்தில் பணிபுரியும் தகுதியான தன்னார்வலர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

மேற்காண் அறிவுரைகளைப் பின்பற்றி பள்ளி மேலாண்மை புதிய குழு அமைக்கப்பட்ட பின் எவ்வித புகாருக்கும் இடமளிக்காது தற்காலிகமாக பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்ய பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் சார்ந்த விவரங்களை (பெயர்/முகவரி/கல்வித் தகுதி விவரம் மட்டும்) இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு– உரிய காலிப் பணியிட விவரங்கள்

27/6/2022

முதன்மைக் கல்வி அலுவலர்,
அரியலூர்.

27/6/22

பெறுநர்
அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

நகல்– மாவட்டக் கல்வி அலுவலர் அரியலூர் / உடையார்பாளையம்/செந்துறை (தகவலின் பொருட்டு)

# பட்டதாரி ஆசிரியர்கள் நிரப்பத்தகுந்த காலிப்பணியிட விவரம்

| Sl No | District Name | Block Name | Management (Govt/ Mpl/ Model School) | Place of School (தமிழில் தட்டச்சு செய்யவும்) | Cagtegory (High / Hr.Sec.) | (Boys / Girls / Co–ed) | Subject |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Ariyalur | T.Palur | Govt. | கோடாலிக்கருப்பூர் | Hr.Sec. | Co–Ed | Tamil |
| 2 | Ariyalur | T.Palur | Govt. | விக்கிரமங்கலம் | Hr.Sec. | Co–Ed | Tamil |
| 3 | Ariyalur | Sendurai | Govt. | சன்னாசிநல்லூர் | Hr.Sec. | Co–Ed | Tamil |
| 4 | Ariyalur | Ariyalur | Govt. | சுண்டக்குடி | Hr.Sec. | Co–Ed | Tamil |
| 5 | Ariyalur | Andimadam | Govt. | ஓலையூர் | High | Co–Ed | Tamil |
| 6 | Ariyalur | Thirumanur | Govt. | குருவாடி | High | Co–Ed | Tamil |
| 7 | Ariyalur | Andimadam | Govt. | ஆண்டிமடம் | High | Girls | English |
| 8 | Ariyalur | Sendurai | Govt. | முள்ளுக்குறிச்சி | Hr.Sec. | Co–Ed | Maths |
| 9 | Ariyalur | T.Palur | Govt. | தென்கச்சிப்பெருமாள் நத்தம் | High | Co–Ed | Science |
| 10 | Ariyalur | T.Palur | Govt. | ஜெ.சுத்தமல்லி | Hr.Sec. | Co–Ed | Science |
| 11 | Ariyalur | T.Palur | Govt. | திருபுரந்தான் | Hr.Sec. | Co–Ed | Science |

| Sl No | District Name | Block Name | Management (Govt/ Mpl/ Model School) | Place of School (தமிழில் தட்டச்சு செய்யவும்) | Cagtegory (High / Hr.Sec.) | (Boys / Girls / Co-ed) | Subject |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 12 | Ariyalur | Sendurai | Govt. | சன்னாசிநல்லூர் | High | Co-Ed | Science |
| 13 | Ariyalur | Sendurai | Govt. | பரணம் | Hr.Sec. | Co-Ed | Science |
| 14 | Ariyalur | Sendurai | Govt. | சோழன்குடிக்காடு | High | Co-Ed | Science |
| 15 | Ariyalur | Ariyalur | Govt. | அருங்கால் | High | Co-Ed | Science |
| 16 | Ariyalur | Andimadam | Govt. | ஓலையூர் | High | Co-Ed | Science |
| 17 | Ariyalur | Andimadam | Govt. | அழகாபுரம் | Hr.Sec. | Co-Ed | Science |
| 18 | Ariyalur | Jayankondam | Govt. | மீன்சுருட்டி | Hr.Sec. | Girls | Science |
| 19 | Ariyalur | Jayankondam | Govt. | எறவாங்குடி | High | Co-Ed | Science |
| 20 | Ariyalur | Jayankondam | Govt. | மேலணிக்குழி | High | Co-Ed | Science |
| 21 | Ariyalur | Thirumanur | Govt. | கண்டிராதித்தம் | Hr.Sec. | Co-Ed | Science |
| 22 | Ariyalur | Sendurai | Govt. | நமங்குணம் | High | Co-Ed | Science |
| 23 | Ariyalur | Ariyalur | Govt. | நாகமங்கலம் | High | Co-Ed | Science |

| Sl No | District Name | Block Name | Management (Govt/ Mpl/ Model School) | Place of School (தமிழில் தட்டச்சு செய்யவும்) | Cagtegory (High / Hr.Sec.) | (Boys / Girls / Co–ed) | Subject |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 24 | Ariyalur | Andimadam | Govt. | இலையூர் வாரியங்காவல் | High | Co–Ed | Science |
| 25 | Ariyalur | Sendurai | Govt. | பொன்பரப்பி | Hr.Sec. | Co–Ed | Social Science |
| 26 | Ariyalur | Sendurai | Govt. | பெரியாக்குறிச்சி | High | Co–Ed | Social Science |
| 27 | Ariyalur | Ariyalur | Govt. | சிறுவளூர் | High | Co–Ed | Social Science |
| 28 | Ariyalur | Ariyalur | Govt. | பெரியதிருக்கோணம் | Hr.Sec. | Co–Ed | Social Science |
| 29 | Ariyalur | Ariyalur | Govt. | சுண்டக்குடி | Hr.Sec. | Co–Ed | Social Science |
| 30 | Ariyalur | Andimadam | Govt. | அய்யூர் | Hr.Sec. | Co–Ed | Social Science |
| 31 | Ariyalur | Andimadam | Govt. | திருக்களப்பூர் | High | Co–Ed | Social Science |
| 32 | Ariyalur | Andimadam | Govt. | கொடுக்கூர் | High | Co–Ed | Social Science |
| 33 | Ariyalur | Andimadam | Govt. | நாகம்பந்தல் | High | Co–Ed | Social Science |
| 34 | Ariyalur | Jayankondam | Govt. | மேலணிக்குழி | Hr.Sec. | Co–Ed | Social Science |
| 35 | Ariyalur | Jayankondam | Govt. | மேலணிக்குழி | Hr.Sec. | Co–Ed | Social Science |

| Sl No | District Name | Block Name | Management (Govt/ Mpl/ Model School) | Place of School (தமிழில் தட்டச்சு செய்யவும்) | Cagtegory (High / Hr.Sec.) | (Boys / Girls / Co-ed) | Subject |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 36 | Ariyalur | Thirumanur | Govt. | தூத்தூர் | High | Co-Ed | Social Science |
| 37 | Ariyalur | Jayankondam | Govt. | கொல்லாபுரம் | High | Co-Ed | Social Science |

Chief Educational Officer

Ariyalur

27/06/22